1984 மார்ச் 30]

திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலை பயணிகள் விடுதி அமைக்கின்ற திட்டத்தின்கீழ் தூத்துக்குடி-திருச்செந்தூர் செல்லும் வழியில் பாண்டிய மன்னர்கள் வாழ்ந்த கொற்கை என்ற இடத்தில் இது போன்ற நெடுஞ்சாலை பயணிகள் விடுதி அமைக்க அரசின் திட்டத்தில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் திட்டத்தில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 413, 414, 415, 416, 417, ஆகியவை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகின்றன.

(முற்பகல் 9-30)

உப்பூர் கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள C.M.C.S.S. என்ற கிளை நிறுவனம்

515—(*வினா எண் 16357) திரு. செ. சிவசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) இராமநாதபுரம் மாவட்டம் ஆர். எஸ். மங்களம் ஒன்றியம் உப்பூர் கிராமத்தில் C.M.C.S.S. என்ற போலி கிளை நிறுவனம் ஆரம்பித்து ஹோமியோபதி மருத்துவர்களை மோசடி செய்து $1\frac{1}{2}$ லட்சம் ரூபாய்க்கு மேல் கையாடல் நடந்திருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அப்படியானால், தடுத்து நிறுத்த என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) மற்றும் (ஆ) : மோசடி குறித்து ஒரு புகார் தமிழ்நாடு ஹோமியோபதி மன்றத்திற்கு வந்தது என்றும் ஆந்திரப் பிரதேசத்திலுள்ள குற்றப் புலனாய்வுத் துறையினர் விசாரணை செய்து குற்றச்சாட்டுகளை நிருபிக்கத் தகுந்த ஆதாரங்கள் இல்லாமையால் மேற்கொண்டு விசாரணை கைவிடப்பட்டதென்று தமிழ்நாடு குற்றப் புலனாய்வுத் துறையினர் தனக்கு அறிவித்துள்ளனர் என்றும் தமிழ்நாடு ஹோமியோபதி மன்றப் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஒரு ஸ்தாபனம் இருப்பதாகவும், அது சம்பந்தமான நடவடிக்கை எடுத்ததன் காரணமாக சரியான புரூப் இல்லாததன் காரணமாக அதை விட்டுவிட்டதாகவும் சொல்லப்படுகிறது. ஆனால், அதே நேரத்தில் பல இலட்சக்கணக்கான ரூபாய் தமிழ் நாட்டிலே அந்த ஸ்தாபனத்தை வைத்து கொள்ளயடித்திருக்கிறார்கள். தமிழ் நாட்டிலே இந்தக் கொள்ளையைத் தடுக்க நமது அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றப் புலனாய்வுத் துறையினர் இங்கே விசாரணை செய்து கொண்டிருக்கிறார்கள். ஜி. சீனிவாசன் என்பவர் ஓமியோபதி கவுன்சிலில் ஒரு உறுப்பினர். அவர் சில குற்றச்சாட்டுகளை கொடுத்திருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடத்திலும் அவர் கொடுத்திருப்பார் என்று கருதுகிறேன். 18-10-1981-ல் இந்த மாதிரியான பெட்டிஷன் கொடுத்து அதிலே 3 மாநிலங்கள், ஆந்திர பிரதேஷ், கே. ஜி. எப்., தமிழ் நாடு ஆகிய மாநிலங்களில் நடைபெறுவதாகவும், ஒவ்வொரு அமைப்பிலும் வெவ்வேறான வகையில் பெயர் வைத்துக்கொண்டு ஒரு மாநிலத்திலே ஒருவர் தலைவராகவும் இன்னொரு மாநிலத்திலே செயலாளராகவும் இப்படியாகச் சேர்ந்து ஒரு அமைப்பை வைத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் நடைபெறுவதாக நம்மிடத்திலே கொடுக்கப்பட்டிருக்கிறது. உடனடியாக அதை நாம் கவனிக்கச் சொல்லியிருக்கிறோம். முழுமையாக நமக்குத் தகவல் கிடைத்தவுடனே, நடவடிக்கை எடுக்கலாம். இதுவரையிலே புரூப், திட்டவட்டமான குற்றச்சாட்டுகள் கிடைக்கவில்லை. ஆகவே, காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, திட்டவட்டமான குற்றச்சாட்டு கிடைக்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். ஆனால், அதேநேரத்தில், சட்டப் பேரவையில் எழுப்புவதை குற்றச்சாட்டாக எடுத்துக் கொண்டு, அந்த நபர்கள்மீது நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இப்படிப்பட்ட குற்றங்கள் தொடர்ந்து கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகளாக இருக்கின்றன. மூன்று ஆண்டுகளாக, பல தடவை டீ. டீ. சி. கூட்டத்திலேயும் கொண்டு வந்திருக்கிறேன்; இங்கேயும் கொண்டு வந்திருக்கிறேன். ஒரு வருஷத்திற்கு முன்பு கேட்ட கேள்வி, இன்றைக்குத்தான் இங்கே எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக மீண்டும் வேகமாக, துரிதமாக நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்பாடு செய்வதோடு, ஏற்கனவே பல இலட்சக்கணக்கான ரூபாய் வசூல் செய்த பணத்தைத் திருப்பிக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

1984 மார்ச் 30]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாமதத்திற்குக் காரணம் என்னவென்றால், ஆந்திர மாநிலத்திலே இருந்து சில தகவல்கள் கிடைக்க வேண்டும். அவர்களைத் தரவேண்டும் என்று கேட்டிருக்கிறோம். அதிலே கொஞ்சம் காலதாமதம் ஆகிறது.

'In his letter dated 11th January 1984, addressed to the Registrar, Tamil Nadu Homeopathy Council. The Deputy Inspector General of Police (C.I.D. Crimes) has reported that the above petition was enquired into by the Hyderabad Crime staff, and that enquiry has revealed that as some of the Tamil Nadu Homeopathy Medical Council Practitioners were denied key posts, the petition was sent against the Christian Missionary, Punganoor, levelling false allegations.'

என்ற தகவல் அங்கேயிருந்து அவர்களுக்கு சாதகமாக வந்திருக்கிறது. சில பேர்களுக்கு இடம் கிடைக்கவில்லை, அதனால் குற்றம் சுமத்தியிருக்கிறார்கள் என்று ஹைதராபாத்திலிருந்து தகவல் வந்திருக்கிறது. ஆகவே, இதிலே காலதாமதம் ஏற்படவில்லை நம் அரசாங்கத்தைப் பொறுத்த வரையிலும், பல்வேறு இலாக்காக்களைப் பொறுத்தவரையிலும் உள்ளபடியே சுறுசுறுப்பாக நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

கிராமப்புறங்களில் சர்க்கரை நோய் கண்டுபிடிக்கும் பயிற்சி முகாம் நடத்தும் திட்டம்.

516—(*வினா எண் 18362) திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கிராமப்புறங்களில் சர்க்கரை நோய் கண்டு பிடிக்கும் பயிற்சி முகாம் நடத்தும் உத்தேசம் அரசிற்கு உண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நடத்தப்படும் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) கிராமப்புறங்களில் சர்க்கரை நோய் கண்டுபிடிக்கும் பயிற்சி முகாம் நடத்தும் திட்டம் ஏதும் இத்துறையில் தற்சமயம் இல்லை.

(ஆ) எழவில்லை.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS